A. No: 100258

# திருவாசியலந்தாதி

O-12 MCM.IT
N29
100258

உ

# திருவாசிலி யந்தாதி.

No. 5 APR 19..
OFFICE OF ... MADRAS

...தம்பராநாதமுதலியார் அவர்கள்,
நூலாசிரியர்.

O-,12mcm1,r
N29
150258

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF ...
5 APR 1929

# அரசிலியந்தாதி.

இஃது,
திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனக்
கவிராயர்,
கொடுலூர்—அ. சிதம்பரநாதமுதலியார் அவர்கள்
இயற்றியது.

டிை ஆதீனம் 23-வது குருமூர்த்தியாக வெழுந்தருளியுள்ள
ஸ்ரீலஸ்ரீ
சுப்பிரமணியதேசிகஞானசம்பந்த பண்டாரசந்நிதி அவர்கள்
பொருளுதவியைக்கொண்டு

ஸ்ரீகாழி வித்துவான்
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களால்

சீகாழி திரிபுரசுந்தரி பிரஸில்
அச்சிடுவிக்கப்பெற்றது.

பிரதி ] 1929. [ ௫

2326
894.8111

உ

குருபாதம்.

# சிறப்புப் பாயிரம்.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர வாதீனம்
திருக்கூட்டத் தம்பிரான்களு ளொருவராகிய வித்வான்
## சட்டைநாதத்தம்பிரான் அவர்கள் இயற்றியது.

சீரார் கொன்றை யரவமதி திகழ்வான் கங்கை யுடன்விரவி
யேரார் சடையா ரடியவர்க்கா வென்று மெளிவந் தருளுவார்
நீரார் தடஞ்சூ ழரசிலிக்கண் ணிலவி யுறைவா ருமைபாகர்
காரார் நிறத்தா னயனிருவர் காண்டற் கரிய வடிமுடியார். (1)

பாட லெனுமெய்ப் பதிகஞ்சம் பந்தர் பாடித் துதித்திடுமெம்
மாட லரவ மரைக்கசைத்த வரனார் பாதத் தந்தாதி
நீட லமைந்த கழைச்சுவையோ நிறமார் கண்டோ செந்தேனோ
ஆட லறிவோர் சுவையாவு மமைந்த தெனவே யணிந்தனனால். (2)

அன்னான் கங்கா குலத்துதித்தே யமைந்த காஞ்சி நாட்டகத்தில்
மன்னி வேலூர்க் கோட்டத்தின் மருவு நெய்தல் நத்தத்தான்
பொன்னார் கொடுவூ ருறையருணா சலவேள் புதல்வன் புகழ்த்தருமை
தன்னிற் புலவன் சிதம்பரநா தப்பேர்க் கவிமை சார்ந்தோனே. (3)

---

ஷை ஆதீனம்
திருக்கூட்டத் தம்பிரான்களுளொருவராகிய
வைத்தீஸ்வரன்கோவில் தேவஸ்தானம் கட்டளை
## இராமலிங்கத்தம்பிரான் அவர்கள் இயற்றியது.

பொன்னகர்வாழ் புலவர்களும் புவிவந்து
புகழ்ந்தேத்தும் புகழே மிக்க
நன்னகரா மரசிலிமா நகர்மருவுந்
தனவழகி நாத னார்நற்
பொன்னடிக்கோ ரந்தாதிப் பாமாலை
புனைந்துரைத்தான் புலமை மிக்க
தொன்னகராங் கொடுவூர்வாழ் சிதம்பரநா
தன்றருமைச் சொல்வல் லோனே.

---

சென்னை-600 008
18025
6-12-MCMLT
N.9

உ

இஃது,

அரசிலியந்தாதி யச்சினிலகப் பொருளுதவிசெய்த புண்ணியமூர்த்திகளது புகழினை இந்நூலாசிரியர் இனிதின் இசைப்பது.

திலகஞ்சேர் நுதன்மடவார் பொழிலெங்கும்
விளையாடித் திரிந்து தெண்ணீர்ச்
செங்கமலத் தடமெங்குஞ் சென்றாடு
மாசிலிவாழ் சிவனுக் கன்பாற்
குலகங்கை வேளாளர் வளமன்னும்
கொடுவூர்வாழ் மழவ ராயர்
கோத்திரத்தில் வந்தசிதம் பரநாதன்
கூறியவந் தாதி மாலை
யுலகெங்கும் புகழ்பொங்கு தருமைமடா
லயச்செங்கோ லுரிமை பூண்ட
வுத்தமரி லிருபதின்மே லொருமூன்றாங்
குருவாகி யோங்கு செல்வத்
திலகுஞ்சற் குணமணிசுப் பிரமணிய
தேசிகனு ரிசைந்த வன்பா
லீந்தபொரு ளுதவியைக்கொண் டச்சிடப்பெற்
றுலவுமுல கெங்கு மாதோ.

ஸ்ரீகாழி வித்துவான்

ப.அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் இயற்றியது.

திங்களஞ் சடிலத் தண்ணல் திகழர சிலியின் கோமா
னங்கள விலியாற் கன்பி னமுதுறழ் தருமந் தாதி
மங்களம் பொலியச் சாற்றி மகிழ்ந்தவக் குரிசில் தொண்டை
நங்களங் கொடுவூர் தேத்து நற்றவத் துதித்த தோன்றல். (க)

சிதம்பர நாத னென்னத் திருந்திய நாவ லோரும்
இதம்பர மாக வேத்து மியற்றமிழ்க் கவிஞர் வாணுட்
சதம்பரம் யாவு மீயுந் தருமையா தீனத் தான்றோர்
விதம்பர வணிந்த வேணி விமலனல் லருள்யாந் தேற. (உ)

அறங்கிளர் தருமை சார்ந்த ஆதீன கர்த்தர் ஞானம்
பிறங்கிய ஞேய மாஞ்சுப் பிரமணி யப்பெம் மானார்
சிறந்தபல் வளத்தா னுய்ந்து திரவிய முதவி யச்சுத்
திறங்கெழு தாச்செய் வித்தார் சீர்த்தியெந் நாளும் வாழ்க. (ந)

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவாசிலி யந்தாதி.

## காப்பு.

சீருடை யானனக் கொம்பொன்று கொண்டு செருக்கியவும்
போருடை யானை முகனைவெல் வேழம் புரந்தருளு
மாருடை யானுமை யாளொரு பாக னரசிலிப்பே
ரூருடை யானுக்கந் தாதிக் கலித்துறை யோதுதற்கே.

## குருவணக்கம்.

பாரோங்கு தெய்வத் திருக்கயி லாய பரம்பரையிற்
பேரோங்கு ஞானப் பிரகாச னாருள் பெற்றபிரான்
காரோங்கு சோலைத் தருமைப் பதிவாழ் கருணையினன்
சீரோங்கு ஞானசம் பந்தன் கழற்கன்பு செய்குதுமே.

## நூற்பயன்.

சாளுவ ராஜ னருடனச் சுந்தரி தன்பதியா
நீளுவ ராழி நிலம்போற் றரசிலி நித்தற்கன்பு
மூளுவ ராகியிவ் வந்தாதி முற்று மொழிந்தநல்லோ
ராளுவ ராகுவர் கற்பக நாடா சையமின்றே.

## நூல்.

கடற்கம லத்தை யடக்கி மடுத்த கலைத்தமிழோன்
மடற்கம லக்கை குவித்து வணங்கி வழுத்துநக
ரடற்கம லப்படு வித்தெனை யாளு மாற்கடலை
நடற்கம லற்கிட மாந்தென் னரசிலி நன்னகரே. (க)

நன்னகத் தைய விடத்தா னரசிலி நாதனணைப்
பன்னகத் தையருள் பங்கயன் சென்னி பறித்தசெங்கைப்
பொன்னகத் தையன் புயங்கா பரணன் புரிசடில
னென்னகத் தையக லாதென்று மேவி யிருப்பவனே. (௨)

இருப்பதத் தத்தி விளமான் கிளைவிட் டெழுந்தெரியு
நெருப்பதத் தத்தி விமவான் மடப்பிடி நீலநிறப்
பருப்பதத் தத்தி யுரித்தோ னரசிலிப் பண்ணவன்றன்
றிருப்பதத் தத்தி கிரிமாய னிட்டகட் செம்மலரே. (௩)

மலராக் கடுக்கை யவர்க்கென்ற போதனை மாரென்மனம்
புலராக் கடுக்கை புகழோ புயல்வணர் பூங்கமலத்
தலராக் கடுக்கை யணிந்தீ ரரசிலித் தண்பதியீ
ரலராக் கடுக்கை யமுதெனக் கொண்டுண்ட வங்கணரே. (௪)

அங்கட் கரும்பனைக் காயும் பரம னரசிலியான்
வெங்கட் கரும்பனைக் கையிபஞ் சாய வெகுண்டுரித்தோன்
றிங்கட் கரும்பனிக் கங்கைக்கு வாய்த்த செழுஞ்சடில
னெங்கட் கரும்பவிழ் தாமரைத் தாளரு ளெண்குணனே. (௫)

எண்ணங் கடந்தவ னன்பர்க் கிளங்கழு காசினிமாத்
தண்ணங் கடந்தழைக் குந்தென் னரசிலிச் சங்கரனை
நண்ணங் கடந்தன மோநம ரங்கா ணமன்றமரை
மண்ணங் கடந்தனு வாழ்வுங் குமிழி மதித்திலமே. (௬)

மதியா தவனுழை காமல் கரசிலி மன்றுவரைப்
பதியா தவனய னம்பகங் கம்பதம் பாணிகொண்டோ
னுதியா தவனொரு மாதா வுமையந்த வுத்தமனைத்
துதியா தவனருந் தொண்டது செய்தி தொழுதுளமே. (௭)

உள்ளலைக் கும்பிணி போம்பகை போமுயர் முத்தியுண்டாங்
கள்ளலைக் கும்பிணை யற்கொன்றை யானைக் கமலவய
லுள்ளலைக் கும்பியிற் கச்சபந் தூங்கு மரசிலியூர்
வள்ளலைக் கும்பிடு வீர்வரு வீர்தரை மானிடரே. (௮)

மானிடந் தக்க மழுவலம் வைக்கு மரசிலியான்
றுனிடந் தக்கமிட் டற்புதச் சக்கரத் தானைகொண்ட
வானிடந் தக்கொடி யானனங் குற்ற வணங்கதனைத்
தேனிடந் தக்கொன்றை மாலையென் றோதந்து தீர்ப்பதுவே. (௯)



தீரத் திகிரிக் கணிவளைக் குற்ற செழுந்தடங்கைத்
தீரத் திகிரிச் சிலையா னரசிலித் தேர்பரவித்
தீரத் திகிரிப் புயத்தா ளளகத் திரள்குலைந்து
தீரத் திகிரிக் கனவளை சிந்தித் தியங்கினளே. (௰)

தியங்கத் தவரையந் தீரக்கல் லாலின் செழுநிழலில்
வயங்கத் தவரை மடமகள் பாகத்த வண்கலனும்
புயங்கத் தவரை சிலிமா நகரத்த போதவதி
சயங்கத் தவரை யரணந் தகித்ததுன் றந்தமன்றே. (௰௧)

தந்தத் தனத்தனந் தாபந் தவிர்த்திடுந் தாணுமறைச்
சந்தத் தனத்தனந் தாமரை யானறி யாச்சரண
வந்தத் தனத்தனந் தாமழு மாணு ரரசிலியான்
கந்தத் தனத்தனந் தானைதல் கண்டிலன் காமனுக்கே. (௰௨)

காலையின் றோடுங் கணபண கங்கண காளகண்ட
சோலையின் றோகை நடமா டரசிலித் தொன்னகரோய்
வேலையின் றோலா வொலிக்குங் கழைமதன் வெங்கணைக்கு
மாலையின் றோறும் வருந்துகின் றாளெங்கள் மாதரசே. (௰௩)

மாதவ னம்புய நாதன் பரவு மலர்ப்பதத்த
வாதவ னம்புலி யங்கி யெனுந்திரி யம்பகத்த
சீதவ ளம்புடை சூழ்தென் னரசிலித் தேவநம
யோதவ னம்பு கழைவில் லனங்கன்வெம் போர்பெரிதே. (௰௪)

போரங்கத் தானைவெம் பூதம் பணிபுனை பூடணங்கள்
காரங்கத் தானை யுரிபோர்வை வாகனங் காளைகணை
சாரங்கத் தானையங் கொள்ளுங் கலந்தலை சாபமலை
தாரங்கத் தானை முகத்தா னரசிலித் தாணுவுக்கே. (௰௫)

தாளத் தனத்தனந் தங்கிய பாகத் தரசிலியான்
வேளத் தனத்த னமக்கரித் திட்ட விழிப்பதத்தன்
கேளத் தனத்தனங் காதலி னன்றோ கிளர்களத்துக்
காளத் தனத்தனந் தந்துகொண் டானிவள் கைவளையே. (௰௬)

வளைத்தலை மோது கடல்வை யகமுமவ் வானகமு
முளைத்தலை யாம லுவப்பக் கடுவுண்ட வுத்தமனே
கிளைத்தலை வேற்கை யரசிலி யாய்விடைக் கேதனத்த
திளைத்தலை வேண்டின னின்னன்ப ரோடருள் செய்குவையே. (௰௭)

செய்க்கே தகைமலர் நீழலைக் கண்டிளஞ் சேல்வெருண்டு
கொக்கே தகுழனைக் கொல்வதிங் கென்றுரங் கொண்டெறிய
இக்கே தரளஞ் சொரிதென் னரசிலி யீசனுக்குத்
திக்கே தரிக்கு முடையென்ப ராரணந் தேர்ந்தவரே. (௧௮)

தேசுந் தரத்த வனசத் தளியினந் தேனருந்தி
மூசுந் தரத்த வரசிலி மேவிய முக்கணவில்
வீசுந் தரத்த வரமன் மதன்கழை விற்குனித்தா
ஞசுந் தரத்தவ ளங்கங் குலைந்தன ளஞ்சினளே. (௧௯)

அஞ்சக் கரத்த னடலழித் தானையை யன்றளித்த
அஞ்சக் கரத்தரி யாங்கருங் கேழலுக் கந்தணனும்
அஞ்சக் கரத்த வடிமுடி காணற் கரியவன்காண்
அஞ்சக் கரத்த னரசிலி மேவிய வற்புதனே. (௨௰)

அற்பாலை யன்றலை யிற்பலி கொண்டா னரைமதியன்
சொற்பாலை யன்ன வுமைகோ னரசிலித் தொன்னகரப்
பொற்பாலை யன்பொங்கு வெங்கனற் கண்ணன் பொலிகயிலைக்
கற்பாலை யன்கதி யன்பர்க் கருளுங் கருணையனே. (௨௧)

கருங்கந் தரத்தன் பசுந்தோகை மேற்செங் கடம்பணிந்து
வருங்கந் தரத்தன் வளவயல் சூழு மரசிலியான்
மருங்கந் தரத்தன்ன மேவும் பிரான்வெண் மழவிடையா
னொருங்கந் தரத்தன்பு கூரிமை யோர்தொழு முத்தமனே. (௨௨)

உத்தரப் பாக மலைசிலை யாக வுலகளந்த
நத்தரப் பாக ரதம்புவி யாக நடத்திச்சென்று
முத்தரப் பாக மதில்பொடி யாக முறுவலித்தார்
நித்தரப் பாகளக் காளத் தரசிலி நின்மலரே. (௨௩)

மலரம்பு கொண்டு வழிபாடு செய்பவர் மாதவத்தோர்
பலரம்பு யத்தயன் பஞ்சா யுதத்தன் படைமழுக்கைத்
தலரம்பு தண்மல ரஞ்சேவு மாரன் றனுவழித்த
நலரம்பு யங்கப் பணியா ரரசிலி நாதரையே. (௨௪)

நாதனந் தம்பிற விப்பர வைக்கொரு நற்புணையாம்
பாதனந் தந்தண் பணைமே வரசிலிப் பாற்பரமன்
மாதனந் தந்தது மன்றிப் பரவை மனங்கரையத்
தூதனந் தந்தரஞ் சென்றான் பரவிய சுந்தரற்கே. (௨௫)



சுந்தரத் தாரக் கிரியா னரசிலித் தொன்னகரா
னந்தரத் தாரடைந் தேத்தும் பதத்த னரியகருங்
கந்தரத் தானர விந்தத் தயனடுக் கங்களைந்தா
னெந்தரத் தாரகத் தின்னலைப் போக்கு மிறையவனே. (௨௬)

இறையிலங் காழி கயல்விழி யாமை யிடுபதக்க
மறையிலங் காழி மறையோன் பனுவ லலங்கலணி
நிறையிலங் காபுரக் கோமான் குலைய நெரித்தவற்குத்
துறையிலங் காயிழை யார்சூ ழரசிலித் தோன்றலுக்கே. (௨௭)

தோற்றந்தத் தானவை தீரும் பரம சுகம்பெறலாம்
நாற்றந்தத் தானைய னொடொறுங் கண்டு நயந்துருகிப்
போற்றந்தத் தாமரைச் செய்யேந் தரசிலிப் புண்ணியனை
நீற்றந்தத் தானை மனமே பணியிது நிச்சயமே. (௨௮)

நிச்சய மாக வுனையே பரவுவ னேயமொடு
பிச்சய மாதவர் பன்னியர் பாற்சென்று பெய்யக்கொண்டோ
யச்சய மாதொரு பாகா வரசிலி யாயரவக்
கச்சய மாலைக் கடுக்கைய நீயெனைக் காத்தருளே. (௨௯)

காலையின் மாசுணக் கச்சோ யரசிலிக் காவலவிற்
காலையின் மாவிழக் காய்ந்தே வுகந்தனைத் தந்தருள்வோய்
காலையின் மாலையிற் றண்மல ரிட்டன்பர் கைதொழுநின்
காலையின் மாதுயர் யானுழந் தாலுங் கருதுவனே. (௩௰)

கரும்பாரஞ் சிந்தும் பணைசூ ழரசிலிக் கண்ணுதலார்
திரும்பாரந் தோமனஞ் செய்வதென் னேயிளந் தென்றலுக்கு
மரும்பாரஞ் சாசுக வேளுக்கும் வேலைக்கு மம்புலிக்குஞ்
சுரும்பாரந் தங்கு குழலாள் வருந்திமெய் சோர்ந்தனளே. (௩௧)

தனத்தானத் தாவெனப் பொன்மன்று ளாடிய சங்கரனென்
மனத்தானத் தானம் மதில்சூ ழரசிலி மாநகரா
னனத்தானத் தான்றொழுந் தாளுடை யானெனை யாளுடையான்
கனத்தானத் தானை முகத்தானைத் தந்த கருணையனே. (௩௨)

கருகால காலம் பரவிய கண்ட கரும்பகட்டில்
வருகால கால வரசிலி மாநகர் வாழ்பரம
வொருகால காரா காரவென் பாருக் குயர்ந்தமுத்து
தருகால காலங் கடந்தோ யெனக்கன்பு தந்தருளே. (௩௩)

தந்தானைத் தாளெறிந் தானுக்கு வான்பதந் தந்தவனை
முந்தானைத் தாவு பரியாக்கொண் டானை முடிபுனையு
மிந்தானைத் தாமக் குழலாள் பரவைக் கிரவிற்சென்ற
சந்தானைத் தாழ்ந்து பணிவோ மரசிலித் தானமுற்றே. (௩௪)

தானந் தவம்பல செய்தாலு முத்தியைச் சாருவரோ
தேனந் தவம்பவிழ் சோலையிற் பாடிய தெள்விளிகேட்
டானந் தவம்பசுங் கேகய மாடு மரசிலிவாழ்
கோனந் தவம்பலத் தாடுங் குழகனைக் கூடலரே. (௩௫)

கூடற் றலையத் தருமிக்குப் பொன்னின் குவையளித்த
பாடற் றலைவ வரசிலி மேவிய பண்ணவனே
யாடற் றலையர வாரப் புயத்த வடையுமுயர்
வீடற் றலைவ ருனைப்பணி யாவெறும் வீணர்களே. (௩௬)

வீணா கரத்தனுந் தும்புரு வும்பண் மிழற்றவிடக்
கோணா கரத்தன் புலிமுனி காணக் குனித்தவன்கா
ணாணா கரத்தழல் வெவ்விட மாகக்கொண் டுண்டருளச்
சேணா கரத்தங் குவித்தேத் தரசிலித் தேசிகனே. (௩௭)

தோரா தவனைச் சிறுவிதி யைத்தந்தஞ் சென்னிசெற்ற
வீரா தவனை மகவரிந் தாக்க விளம்பியன்பு
பேரா தவனை யுகந்தோ யரசிலிப் பிஞ்ஞகனே
சாரா தவனை விலரையென் பாருனைச் சார்ந்தவரே. (௩௮)

சாரக் கரும்பன மென்மொழி பாகத்தன் சாமகண்டன்
கோரக் கரும்பன கம்பூண் டரசிலிக் கோயில்கொண்டோன்
வீரக் கரும்ப னலியச் சருமம் வெகுண்டுரித்தோன்
மாரக் கரும்ப னலம்பகத் தானை வணங்குதுமே. (௩௯)

வணங்கார் முகஞ்செழு மாமேரு வாக வளைத்தெடுத்து
வணங்கார் மதிலிறுத் தான்றண் ணரசிலி வானவன்பூ
வணங்கார் மருவும் பொழிற்றில்லை கச்சி மகிழ்ந்தவனை
வணங்கார் மதிநதி சூடும் பிரானருள் வாய்த்திடுமே. (௪௰)

வாசவ னந்தாஞ் சென்றேங்கு சோலையில் வண்டினங்கள்
மூசவ னந்திரி செய்சூ ழரசிலி முன்னவனைப்
பேசவ னந்தரம் பீடையெல் லாங்கெடும் பின்னைவிழை
கேசவ னந்தணி செங்கையன் வாழ்பதங் கிட்டுமன்றே. (௪௧)



சென்னை-600

அன்றேனம் பொன்றத் தடிந்ததன் றந்த மணிந்தபிரான்
பொன்றேனம் பொங்கரிற் பூந்தே னருந்து மரசிலியான்
வென்றேனம் பொன்றுதந் தாலெனக் கேட்ட விசயனுக்குச்
சென்றேனம் பொன்றுஞ் செயமெனத் தந்த சிவக்கொழுந்தே. (௪௨)

கொழுவலங் கீறிய சால்வழி யேசென்று கூன்பணில
முழுவலங் கார வனசத்தி லேறிவெண் முத்துயிர்க்கு
மழுவலங் காதலித் தான்வரீ ழரசிலி மாநகரைத் (௪௩)
தொழுவலங் கால்கொடு சூழ்மன மேநந் துயரறுமே.

துயரத மாகு மரசிலி மேவிய சுந்தரன்பொற்
புயரத மாலைக் கடுக்கையன் பூங்கழல் போற்றுமவர்
கயரத மாவொடு காலாள் புடைவரக் கார்முகக்கைத் (௪௪)
தயரத மாமக னென்னப் புரப்பர் தரணியையே.

தரமான் மருவும் புயத்தா னரசிலித் தண்பதியான்
வரமான் மழுக்கை வரதனுக் கோதுவம் வாரிசச்செங்
கரமான் மதப்பொற் பயோதரத் தாளக் கழைகுனிக்கு (௪௫)
முரமான் மகன்கணைக் காற்றுது நெஞ்ச முலர்ந்ததையே.

உலங்காதல் கூருந் தடந்தோ ளரசிலி யுத்தமன்பாற்
கலங்கா தவருங் கலங்கக் குரங்காற் கனல்பரந்த
விலங்கா தகன மெனமனம் வேவ வெனைமதியம்
விலங்கா தழற்றுஞ் செயலைச்சென் றோதுக வெண்குருகே. (௪௬)

குருகனந் தண்ணம் பணைவா ழரசிலிக் குன்றவில்லான்
முருகனந் தந்தை யிதழியங் கண்ணி முடித்தபிரா
னருகனந் தங்குறட் பூதங்கள் சூழப்பொன் னம்பலத்தி (௪௭)
லொருகனந் தங்கிய தாளெடுத் தாட லுகந்தவனே.

உகமேல் விசும்பி லொளியோனைத் தந்த மொழித்தவனை
மகமேரு விற்கை யரியா சுகத்தனை வானளவுஞ்
சுகமேவு தண்ணம் பொழில்சூ ழரசிலிச் சுந்தரனை (௪௮)
யகமே வழுத்த வினையாவு நம்மை யகன்றிடுமே.

அடித்தவப் பார்த்தனுக் காசுகந் தந்த வரசிலியாய்
முடித்தவப் பார்சடை யாய்விடை யாய்விழி மூன்றுடையாய்
துடித்தவப் பாடுற்ற விண்ணோர் துயரந் தொலையவிடங்
குடித்தவப் பாகுளிர் கொன்றைகண் டேங்குமென் கோல்வளையே.

கோலத்தந் தந்த மணிந்தா ரரசிலிக் கொற்றவனார்
கோலத்தந் தந்தர நுண்ணிடை பாகர் கொழுந்தமிழ்க்குக்
கோலத்தந் தந்தவர் செவ்வித ழிக்கன்பு கூர்ந்தவர்தக்
கோலத்தந் தந்தருஞ் செவ்வித ழிக்கன்பு கூர்ந்திலரே. (௫௰)

கூரிய மாமழுக் கையா னரசிலிக் கோயில்கொண்டான்
பாரிய மாசுணக் கச்சானுக் கன்பனென் பாலனுக்குங்
காரிய மானது தக்கதன் றந்தக் கருத்தையினித்
தீரிய மாவுனைத் தாக்கிய பாதமென் சிந்தையதே. (௫௧)

சிந்திக்கச் சித்தங் கரத்துணை சேரச் சிரங்குனிந்து
வந்திக்கச் சித்திரச் செந்தமிழ் பாடி வழுத்துகவாய்
சந்திக்கச் சித்தி யகிலோங் கரசிலிச் சங்கரனை
முந்திக்கச் சித்திருக் காளத்தி மேவிய முத்தனையே. (௫௨)

முத்தனை யானை யரசிலி மேவிய முக்கணனை
நித்தனை யானை வதனத் தனைத்தந்த நின்மலனை
யத்தனை யானை யுகந்துகைத் தானை யரவணிந்த
பித்தனை யானை முகத்தவ னேயென்று பேசுவனே. (௫௩)

பேசத் தனையன்பர் பேரின்ப நல்கும் பெரியனுமை
நேசத் தனைத்தென் னரசிலி யானை நினைந்திலர்காற்
காசத் தனையு முதவா தவனையுங் கன்னவென்பார்
பாசத் தனையெப் படிகடப் பாரந்தப் பாவலரே. (௫௪)

பாவக் கரமதை சீர்கண்டு பாடும் பரிசறியேன்
கோவக் கரமலை குஞ்சரங் காத்தருள் கூர்ங்கணையார்
மூவக் கரமலை பாகத் தரசிலி முத்தரெனை
மேவக் கரமதை யாவரு கென்பர்தம் மெய்க்கதிக்கே. (௫௫)

மெய்க்கம்பத் தானை வரைக்கீழ் நலிய மிதித்தவனுங்
கைக்கம்பத் தாதவிழ் போதுகொண் டானுகக் காய்ந்தவனு
மைக்கம்பத் தானை யுரிபோர்வை யானு மலையிறைமங்
கைக்கம்பத் தாவு மரசிலி மேவிய கண்ணுதலே. (௫௬)

கண்ணஞ் சுரும்பனை யாளுநன் புயப்பொற் கடுக்கையந்தார்க்
குண்ணஞ் சுயங்குகின் றுளரு ளாய்மறை யோர்ந்துணர்ந்தோ
ரெண்ணஞ் சுருங்கு முறையுரைத் தாய்புவி யேழுடனே
விண்ணஞ் சுநஞ்ச மயின்று யரசிலி வித்தகனே. (௫௭)



வித்தத் தரத்தவர் வாங்கித் திரிபுரம் வீறழித்த
யுத்தத்த ரத்த முடிமேவு மாதர் யுகளமுள்ளா
ரத்தத்த ரத்த வனசன் றலைக்கலத் தையங்கொண்டார்
நத்தத்த ரத்தண் பணைவா ழரசிலி நாயகரே. (௫௮)

நாதந் தருமறை நாலும் பரவு நலஞ்சிறந்த
சூதந் தருவளர் காமல் கரசிலித் தோகைபங்கன்
பாதந் தருமனை வீட்டிப் பரிக்கு மரிவிழியைத்
தூதந் தருணப் பரவைதன் பாற்செலுந் தொண்டனுக்கே. (௫௯)

தொண்டைக் கவானிளந் தோகையஞ் சாயல் சுருளளகந்
தொண்டைக் கனிநிகர் செவ்வாய்ப் பயோதரச் சுந்தரியாள்
தொண்டைக் கனிவொடு செய்யத்தன் வாமந் துலங்கவைத்தான்
தொண்டைக் கமல வயனுட் டரசிலித் தூமணியே. (௬௰)

தூரிய மூரும் பெருமா னரசிலித் தொன்னகரான்
கூரிய மூவிலைச் சூலா யுதன்கொழுங் கொன்றையினன்
சூரிய மூர்த்தி மதியங் கியாகுஞ் சுடர்விழியான்
காரிய மூன்று மிரண்டுஞ்செய் வானெந்தக் காலமுமே. (௬௧)

காலம் பரந்தரை காரண லாகுங் கடவுள்புலித்
தோலம் பரந்தரித் தார்தென் னரசிலித் தோகைபங்க
ராலம் பரந்த களத்தா ரிதழி யலங்கனல்கார்
வேலம் பரந்தரு கூர்வாள் விழிமின் மெலிவதென்னே. (௬௨)

மெலியம் புலிவிண் ணதியா டரவணி வேணியினன்
பலியம் புயத்தயன் சென்னியிற் கொள்ளும் பரன்கடுக்கை
மலியம் புயத்தரன் றண்கா வரசிலி மாநகரா
னலியம் புதிக்கடு வுண்டா னமரா ருலப்பறவே. (௬௩)

அறவே தனையெனை யாண்டா னணிகொ ளரசிலியான்
றிறவே தனையொரு சென்னிகொய் தானடற் றென்னிலங்கை
மறவே தனையம் மலைக்கீ ழடர்த்துக்கை வாளளித்தான்
பிறவே தனையவன் பொற்று ளிணைதொழப் பெற்றவர்க்கே. (௬௪)

பெற்றந் தரத்த பரியாக மேற்கொள் பெருமவொரு
பொற்றந் தரத்த புகழ்சே ரரசிலிப் புண்ணியனே
யற்றந் தரத்தம மேனிவெங் கால னணுகுமுனம்
விற்றந் தரத்த மலர்த்தாள் பெயர்த்தென்முன் மேவுகவே. (௬௫)

மேவார் மதுகை யகற்றிப் புரங்கொன்ற வித்தகனார்
மூவார் மதுரையிற் பிட்டுக் குகந்துமண் முன்சுமந்தார்
காவார் மதுகரம் பண்பா டரசிலிக் காவலற்குத்
தூவார் மதுமல ரென்செய்கு வார்தந் தொடர்வினைக்கே. (௬௬)

தொழுந்துணைக் கும்ப முலைமுக நோக்குந் துடித்துமண்மேல்
விழுந்துணைக் குங்கழை வில்லியம் பென்னும் விமலவென்னு
முழுந்துணைக் குஞ்சங் கொதுங்கும் பழன வரசிலிபார்த்
தழுந்துணைக் குன்னையல் லால்வே றிலையென்னு மாரணங்கே. (௬௭)

ஆரணத் தந்த மடியா ரிதய மரசிலிப்பே
ரூரணத் தந்தங் குழையானைக் கண்டென் னணங்குரைத்துக்
காரணத் தந்த வரைநேர் புயப்பொற் கடுக்கையந்தார்
வாரணத் தந்த வனமுலை யீர்கொண்டு வம்மினினே. (௬௮)

வம்மின் னமர்காள் வணங்குமின் வாழ்த்துமின் வாசமலர்ச்
செம்மின் னமர்திரு மார்பனு மோதிமச் சேவகனுந்
தம்மின் னமர்தணி யத்தழ லாய வரசிலியா
னம்மின் னமர்சடை யாடமன் றாடிய வத்தனையே. (௬௯)

தனையரைக் காதன் மனையாளை யன்னையைத் தந்ததந்தை
தனையரைக் காடையை யுண்டியை யுன்னித் தளர்ந்தகவே
தனையரைக் காணொடி யுந்தவி ரீர்தொழுஞ் சையமின்னா
தனையரைக் காய மதிசூ டரசிலிச் சம்புவையே. (௭௰)

சங்கத் தவளக் கதிர்க்குழை யாயத் தடவரையாள்
பங்கத் தவளக் கமலப் பழன வரசிலியா
யெங்கத் தவளக் கரினஞ் சயின்றரு ளீசவனை
யங்கத் தவளக் கருந்திற லாயுனக் கஞ்சலியே. (௭௧)

அஞ்சா னனத்தைய வந்தண் பழன வரசிலியாய்
மஞ்சா னனத்தையன் கோதமன் வான்மிக மாமுனிவன்
றஞ்சா னனத்தையன் றோத்திரஞ் செய்து தொழுந்தகைய
பஞ்சா னனத்தையன் றட்டவ தாகின் பதம்புகவே. (௭௨)

புகழக்க மண்டலந் தண்டஞ் சுமந்து புறந்திரிந்தே
யிகழக்க மண்டலங் கற்பவந் தீர்கதி யெய்துவரோ
வகழக்க மண்டல முண்டவன் சாத்து மடியரவார்
திகழக்க மண்டலஞ் சென்றேத் தரசிலிச் சிற்பரனே. (௭௩)



சிற்பந் தயங்கு மதில்சூ ழரசிலிச் செல்வர்முத்தின்
பொற்பந்தர் காழிப் புதல்வர்க்கு நல்கும் புனிதர்பனி
வெற்பந் தரிபங்கர் மாலைதந் தாரிலர் மின்மெலிந்து
கற்பந் தனிலு மதிகமென் பாளொரு கங்குலையே. (௭௪)

கங்காள மாலைய காஞ்சன மால்வரைக் கார்முகத்த
பங்காள மாதுக் களித்தோ யிருக்குப் பரிப்புரத்தோ
யங்காள மாமுகில் வண்ணனெண் கண்ண னறிவரியோய்
வெங்காள மாசுணம் பூண்டோ யரசிலி வித்தகனே. (௭௫)

வித்தமும் வாழ்வும் வரும்பர மானந்த வீடெளிதாம்
பித்தமும் வாத சயித்திய முந்தரு பீடையறும்
நித்தமும் வாளையுஞ் செய்மன் னரசிலி நன்னகர்க்கண்
மத்தமும் வான்மதி யும்புனை வானை வணங்கினர்க்கே. (௭௬)

வணங்குங் கொடியிடை மானார் நயன வலையிற்சிக்கி
யுணங்குங் கொடியனுன் னன்பர்தங் கூட்டத் துறுவதென்றோ
வணங்குங் கொடியுடை யம்பொற் புரிசை யரசிலியா
யிணங்குங் கொடியுட னீமத்து ளாடு மிறையவனே. (௭௭)

இறையம்பு தண்மல ரஞ்சிலிந் தீவர மேந்திநின்று
னறையம் புயமுத னான்குமெய் தங்கச னன்னுதன்மேற்
பிறையம் புலவு முடியா யரசிலிப் பிஞ்ஞகனே
கறையம் புலவ ருயக்களத் திட்டருள் கண்ணுதலே. (௭௮)

கண்ணங் கனந்த மகபதிக் காக்கிய கௌதமப்பேர்
நண்ணங் கயந்தனின் மூழ்கிச் சிவாய நமச்செபித்து
வண்ணங் கனலனை யான்றண் ணரசிலி வானவனைப்
பெண்ணங்க நண்ணவைத் தானைத் தொழவுறும் பேரின்பமே. (௭௯)

பேரானை யாடற் பரியாக வூரும் பிரானனந்தம்
பேரானை யானன னென்னகத் துள்ளே பிறங்குமையன்
பேரானை யானலிந் தாலும் புலமெனப் பேசுமைந்து
பேரானை யாதெனை யாட்கொண் டருளும் பெருந்தகையே. (௮௰)

பெருந்தான மாவுரி போர்த்தா னரசிலிப் பெட்புடையான்
வருந்தான மாறன்கை மாறுகொண் டோச்சவு மண்சுமந்தான்
றருந்தான மாவலி பாற்கொண் டவனயன் சாரவொண்ணா
திருந்தான மாரழன் மாமலை யாயெழி லேற்றினனே. (௮௧)

எற்றுக் கமலத் தயன்றலைப் பாசனத் தின்பமுறச்
சோற்றுக் ககந்தொறுஞ் சென்றானை யெண்ணித் துதிமனமே
தாற்றுக் கமுகு வளர்கா வரசிலித் தற்பரனை
நீற்றுக் கவின்றிகழ் செம்மேனி யானையெந் நேரமுமே. (௮௨)

நேராக வன்பர் பரவும் பரம னிலவுகளங்
காராக வன்பணி நஞ்சயின் றானுமை கங்கைகொண்கன்
சீராக வன்பணி செய்தேத் தரசிலிச் செம்மல்புரப்
போராக வன்பனிப் பூந்தா மரைப்பதம் போற்றுதுமே. (௮௩)

போர்த்தானை யானை யுரிகொண் டரசிலிப் புண்ணியனைத்
தீர்த்தானை யான்புரி தீவினை யாவையுஞ் சென்றொழியத்
தேர்த்தானை யாடற் சிலைவேள் பொடிபடத் தீவிழியாற்
பார்த்தானை யாரணப் பாடலத் தானைப் பரவுதுமே. (௮௪)

பாசங் கரதலங் கொண்டவ வேதப் பரிபுரத்த
வாசங் கரதனச் சுந்தரி யன்ப வமலகங்கா
தாசங் கரவணை யாற்களித் தோவெனச் சந்ததம்விப்
பிரசங் கரஞ்சலி செய்வா ரரசிலிப் பெட்பனையே. (௮௫)

பெண்ணைக் கரத்தந்தி மாமுகப் பிள்ளையைப் பெற்றருண்முக்
கண்ணைக் கரத்தங்கு செஞ்சடை யாற்குநங் கைகுவியும்
வெண்ணைக் கரத்த மலர்வாய் திறந்த விடையவற்குப்
பண்ணைக் கரத்தடஞ் சேர்தண் ணரசலிப் பண்ணவற்கே. (௮௬)

பண்டருந் துங்க மொழியாளை யெய்வதென் பண்ணவருந்
தொண்டருந் துன்று மரசிலிச் சோதி துளவணிந்தோன்
வண்டருந் துங்கட் கமலா லயனை மலைந்துவயங்
கொண்டருந் தும்பையும் வாகையுஞ் சூடிய கோண்மதனே. (௮௭)

கோலத் திருக்கம லத்தன்பு கூரு மரசிலியான்
பாலத் திருக்கன் பகன்கண் ணெயிறு பறித்துகுத்தான்
சீலத் திருக்கணி நூபுரச் செம்மலர்ச் சேவடியா
ஞாலத் திருக்களத் தம்மான் மழுமறி யத்தத்தனே. (௮௮)

அத்தத் திருக்கத் திருத்தேவி யாயசை யான்கொடியாய்ச்
சித்தத் திருக்கற்ற வாகன மாய்நற் செழுங்கணையாய்
நத்தத் திருக்கர னண்ணுவ னட்புக் களவுமுண்டோ
தித்தத் திருக்க னரசிலி மேவிய செல்வனுக்கே. (௮௯)



செல்வந் துலவு மலர்த்தண் பொதும்பர் செறிந்திலங்கச்
செல்வந் துலங்குநற் சீர்சா லரசிலிச் சிற்பரன்பாற்
செல்வந் துணைமலர்ச் சேவடி வந்தித்துச் சேவைசெய்வஞ்
செல்வந் துணுமரத் தூண்போற் சிதையுநந் தீவினையே. (௯0)

தீவினை யாயின தீரும் பகைகெடுஞ் செங்கமலப்
பூவினை யாதன மாகக்கொள் வாழ்வும் பொருந்திவருஞ்
சேவினை யாடற் பரியாக வூர்ந்தருள் செய்யுமையன்
மூவினை யாற்று மரசிலி வாணனை முன்னினர்க்கே. (௯௧)

முன்னான் மருங்கிருந் தந்தணர்க் காகமமுப்பொருளுஞ்
சொன்னான் மறலி விழவுதைத் தானொருதொண்டனுக் காப்
பொன்னான் மருவுங் கொடியா னரசிலிப் பூம்பதியா
னன்னான் முகத்தய னாரா யணன்பணி நாயகனே. (௯௨)

நாயக னஞ்சத் தனத்தன் பருப்பத நாரிபங்கன்
பேயக னஞ்சத் தனத்தையுண் டாவி பெயர்த்தகொழுஞ்
சாயக னஞ்சத் தனத்துங் களத்தன் றழல்விழியன்
றாயக னஞ்சத் தடத்தண் ணரசிலித் தற்பரனே. (௯௩)

தற்பந் தனைய ரெனத்தளர்ந் தேனுக்குத் தண்ணளியாற்
பற்பந் தனையணிந் தஞ்செழுத் தோதும் பரிசுதந்தான்
பொற்பந் தனைய தனச்சுந் தரிமின் புணர்புயத்தா
னிற்பந் தனைய னரசிலி மேவிய வீச்சுரனே. (௯௪)

ஈகையி லாவெறும் வீணர்தம் பாற்சென் றிதமுறவே
வாகையி லாறு முகவவென் பாருனை வாழ்த்தலாய்
மாகையி லாய வரையா யரசிலி வாழ்பரம
பாகையி லார்கடு வுண்பரந் தோசில பாவலரே. (௯௫)

பாவக னஞ்சக் கரந்துணித் தான்பகன் பல்லுகுத்தான்
பூவக னஞ்ச முகைத்தவன் சென்னியைப் போக்கும்விறற்
சேவக னஞ்சக் களத்தா னரசிலித் தேவனன்பர்
மாவக னஞ்சக் கரத்தான் மதிபுனை வானவனே. (௯௬)

வானாறு மாட லரவும் புதிய மதிக்கொழுந்துந்
தேனாறு மாரக் கடுக்கையுஞ் சூடுஞ் சிவனமலை
கோனாறு மாமுகற் றந்தோ னரசிலிக் கோயில்கொண்டோ
னானாறு மாறு துயரொழித் தென்னுள நண்ணினனே. (௯௭)

நண்ணித் திருமலர்த் தண்ணம் பொகுட்டிடை நத்தினங்கள்
வெண்ணித் திலஞ்சொரி செய்கு ழரசிலி வித்தகனை
யெண்ணித் தினந்தின மன்பர்சென் றேத்து மிறையவனை
யண்ணித் திருமறு மார்பன் பணியு மடுத்தடுத்தே. (௯௮)

அடற்றால மேழுள வங்கிக் கருந்த வரணளித்தான்
மடற்றால மேநிகர் கைமுகன் றாதை மழுப்படையான்
மிடற்றால மேலவன் விண்மே லுலகம் விரித்தாங்கக்
கடற்றால மேத்து மரசிலி யாளுமை காதலனே. (௯௯)

காதலை யானின் றசைகொடி யாயெனைக் கைவிடத்த
காதலை யானின் றரிதா ழரசிலிக் கண்ணுதலே
காதலை யானின்ற வெண்குழை யாய்நின் கழல்விரவுங்
காதலை யானின் றடைந்தேன் கருணைப் பெருங்கடலே. (௱)

அரசிலியந்தாதி முற்றிற்று.

180208
சென்னை-600 005

உ

## தருமபுர ஆதீனத்து

# வெள்ளிரத நிர்மாணச் சிறப்பு.

சீர்மேவு கலிசகம் பஞ்சா சகஸ்திரஞ்
செல்லவரு திரிதசத் திற்
றிகழ்விபவ நாமசம் வத்சரத் திரசிதச்
சித்திர மணித்தேர் தனைக்
கார்மேவு பூங்குழற் றேகைஞா னம்பிகா
காதலன் கூவிள வனங்
காதல்கூர் ஞானபுரி யீசன்மேற் கொள்பவனி
காணப் புரிந்தன னரோ
பார்மேவு தருமையா தீனமமர் கயிலைப்
பரம்பரையின் வந்த ஞான
பானுவா யிலகுசுப் பிரமணிய தேசிகன்
பாவலர் வழுத்து மேலோன்
தார்மேவு மக்கமும் பூதியுஞ் செந்துகிர்ச்
சடைமகுட முந்திகழ் தருஞ்
சாத்விகத் தன்மையன் றண்ணளிகொள் விண்ணகத்
தருவனைய பரம குருவே.